***(CHAPTER XXIII, CR.P.C.)***
***IN THE COURT OF V METROPOLITAN MAGISTRATE,***
***EGMORE, CHENNAI – 08.***

| | | |
|---|---|---|
| Calendar | : | |
| Miscellaneous | : | **Case No.8747/2022** |
| witness for Prosecution | : PW5 | |

| | |
|---|---|
| Name | : திருமதி. மகாலட்சுமி |
| Father's/Husband's Name | : திரு.பிரகாஷ் |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : 35 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 05th day of May 2025.
(எதிரி ஆஜர்)

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் தற்போது அண்ணா நகர் மது விலக்கு அமலாக்கதுறையில் காவல் உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்னர் கடந்த 2022ம் ஆண்டு கே1 காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்தபோது, கடந்த 05.02.2022 அன்று 17.30 மணிக்கு நான் நிலையப் பொறுப்பில் இருக்கும்போது புகார்தாரர் அசிலியா வினோலா என்பவர் நிலையம் ஆஜராகிக் கொடுத்த புகாரைப் பெற்று கே1 குற்ற எண். 186/2022, சட்டப் பிரிவுகள் 294(பி), 323, 448 இதச வில் வழக்கு பதிவு செய்தேன். முதல் தகவல் அறிக்கை அதசாஆ 4 ஆகும். அசல் புகார் மனு முதல் தகவல் அறிக்கை ஆகியவற்றை கனம் 5 ஆவது பெருநகர குற்றவியல் நீதிமன்றத்திற்கும் ஏனைய நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் ஒரு நகலை என்னுடைய விசாரணைக்கும் எடுத்துக் கொண்டு சம்பவ இடம் சென்று சாட்சிகள் அசிலியா வினோலா, ஜெயந்தி, சங்கரி, ஜமுனா, கந்தவேலு, ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

சம்பவ இடத்தில் சாட்சிகள் ஜமுனா, கந்தவேலு ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தைப் பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் வரைபடம் தயார் செய்தேன். அந்த பார்வை மகசர் அதசாஆ 5 ஆகும். வரைபடம் அதசாஆ 6 ஆகும். இவ்வழக்கு சம்பந்தமாக எதிரிக்கு கு.வி.மு.ச பிரிவு 41ஏ நோட்டிஸ் அனுப்பி விசாரணை செய்து அனுப்பி வைக்கப்பட்டார். காயமுற்றவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் ராஜசேகர் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து விபத்துப் பதிவேட்டு மற்றும் காயச் சான்று பெற்றேன். இத்துடன் புலன் விசாரணை முடித்து எதிரி மீது இதச பிரிவுகள் 294(பி),323,448ன் கீழ் குற்ற இறுதி அறிக்கையைத் தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

புகார்தாரர் காவல் நிலையம் ஆஜர் ஆகி எப்போது புகார் கொடுத்தார் என்றால் 21.12.2021ம் தேதி காலை 11.30 மணிக்கு புகார் கொடுத்தார். புகாரை நான் படித்து பார்த்து தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன் என்றால் சரிதான். புகாரில் உள்ள சங்கதிகளுக்கு ஏற்றவாறு தான் நான் முதல் தகவல் அறிக்கையில் சட்டப்பிரிவுகள் போட்டேன் என்றால் சரிதான். புகாரில் எதிரி அ.சா.1ன் வீட்டில் அத்துமீறி நுழைந்ததாக வாசகம் உள்ளதா என்றால் உள்ளது. அ.சா.1 குடியிருந்த வீடு யாருக்கு சொந்தமானது என்று எனது விசாரணையில் தெரிய வந்ததா என்றால் எதிரிக்கு சொந்தமானது என்று தெரியவந்தது. சம்பவ வீடு அடுக்குமாடி குடியிருப்பு என்றால் சரிதான். நான் எந்த தேதியில் சென்று பார்வை மகஜர் வரைபடம் தயார் செய்தேன் என்றால் 05.02.2022ஆம் தேதி 18.00 மணிக்கு தயார் செய்தேன். பார்வை மகஜர் மற்றும் வரைபடத்தில் தேதி குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல, குறிப்பிட்டுள்ளேன். நான் சம்பவ இடம் சென்று சம்பவ வீட்டை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்யவில்லை என்றால் சரியல்ல. அ.சா.2 மற்றும் 3 ஆகியோரை நான் சம்பவ இடம் சென்று விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தில் அ.சா.1ன் கணவர் சம்பவ இடத்தில் இருந்ததாக புகாரில்

குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அ.சா.1ன் கணவரை வழக்கு சம்பந்தமாக விசாரிக்கவில்லை என்றால் சரிதான். அ.சா.1ன் கணவரின் செல்போனை எதிரி உடைத்ததாக புகாரில் அ.சா.1 தெரிவித்துள்ளார் என்றால் சரிதான். உடைந்த போனை நான் சம்பவ இடத்தில் நான் கைப்பற்றினேனா என்றால் இல்லை. உண்மையில் சம்பவம் நடந்திருந்தால் நான் மேற்படி உடைக்கப்பட்ட போனை கைப்பற்றியிருப்பேன் என்றால் சரியல்ல. புகாரை அ.சா.1 என்னிடம் நேரடியாக கொடுக்கவில்லை என்றால் சரிதான். மேற்படி புகாரின் பேரில் வழங்கப்பட்ட சி.எஸ்.ஆர் பேரில் தான் நான் வழக்கை விசாரித்தேன். புகார் கொடுத்த அன்று எதிரி மீது ஏன் வழக்கு தாக்கல் செய்யப்படவில்லை என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. வழக்கு விசாரணையை யார் உத்தரவின் பேரில் நான் விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன் என்றால் ஆய்வாளர் உத்தரவின் பேரில் எடுத்துக்கொண்டேன். சி.எஸ்.ஆர் வழங்கிய நபர் யார் என்றால் உதவி ஆய்வாளர் பார்த்திபன். அவரை நான் இந்த வழக்கில் சாட்சியாக விசாரித்துள்ளேன். உதவி ஆய்வாளர் பார்த்திபன் புகாரை பெற்று விசாரணை செய்த போது புகாரில் முகாந்திரம் இல்லை என்பதால் வழக்கு பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் சம்பவ சாட்சிகளை எந்த தேதியில் விசாரித்தேன் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். நான் வழக்கின் விசாரணையை சரியாக மேற்கொள்ளாமல் எதிரி மீது தவறான குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்த தேதி 20.12.2021 ஆகும். புகார் கொடுத்த தேதி 21.12.2021 ஆகும்.

Sd/-Tr.S.Santhana Kumar,
V Metropolitan Magistrate,
Egmore, Chennai - 08.